| | | |
|---|---|---|
| சாட்சி : PW1<br>பழனியம்மாள், க/பெ சீதாராமன் | அ.வ.எண்.131/2020 | 02.06.2026 |

**<u>குறுக்கு விசாரணை தொடர்ச்சி</u>**

1. நான் முன்பாக தாக்கல் செய்த அ.வ.எண்.75/2014 என்றால் சரிதான். மேற்படி வழக்கில் புதிய வழக்கு தாக்கல் செய்ய அனுமதி கோரி மனு தாக்கல் செய்த பின்னர் திரும்ப பெற்றேனா என்றால் இல்லை. மேற்படி வழக்கானது என்னுடைய ஆஜரின்மையின் காரணமாக தள்ளுபடி செய்யப்பட்டது என்றால் சரிதான். இந்த வழக்கை நான் கடந்த 2020ம் ஆண்டு தான் தாக்கல் செய்தேன் என்றால் சரிதான். மேற்படி அ.வ.எண்.75/2014–ஐ நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி தாக்கல் செய்யப்பட்டது என்றால் சரிதான். இவ்வழக்கை விளம்புகை மற்றும் நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரியும் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான்.
2. 2014ம் ஆண்டு வழக்கு தாக்கல் செய்த போது சீதாராமனிடமிருந்து பன்னீர்செல்வம் குடும்பத்தார் தாவா சொத்தை கிரையம் பெற்றுவிட்டதாக எதிர்வழக்குரை தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றாலும், அதனால் மேற்படி விவரம் 2014ம் ஆண்டே தெரியும் என்றால் சரியல்ல. மேற்படி சீதாராமன், பன்னீர்செல்வத்திற்கு செய்துகொடுத்த கிரையம் செல்லத்தக்கதல்ல என பரிகாரம் கோரவில்லை என்றால் சரியல்ல. பன்னீர்செல்வம் எனக்கு தம்பி மகன் ஆவார். எனக்கும், பன்னீர்செல்வம் குடும்பத்தாருக்கும் எனது கணவர் இறந்தது முதல் பேச்சு வார்த்தை இல்லை என்றால் வயல் பிரச்சனையானது ஏற்பட்டது முதல் பேச்சு வார்த்தை இல்லை.

மேற்படி வயலை எனது கணவர் சீதாராமன், பன்னீர்செல்வத்தின் தந்தைக்கு ஒரு முதலியார் சொத்தை எழுதி வைத்த விவரம் எனக்கு தெரியும்.

3. எனக்கு ஒரு மகள் இருந்தார், அவர் தற்போது இறந்துவிட்டார். இரண்டு பேர குழந்தைகள் இருக்கிறார்கள். மேற்படி வயலை எனது சகோதரரிடம் நான் கேட்ட போது அவர் எனக்கு கொடுக்க மறுத்துவிட்டார் என்றாலும், அதனால் தான் பேச்சு வார்த்தை இல்லாமல் போனது என்றால் சரிதான். மேற்படி இடத்தில் இருந்த மரத்தை நான் வெட்ட சென்ற போது பன்னீர்செல்வம், எனது கணவர் அவரது தந்தைக்கு விற்றுவிட்டார் என்பதால் என்னை தடுத்துவிட்டார் என்றால் ஒரு வாரம் இருக்கும். அதே போல் 12 வருடத்திற்கு முன்பு பிரச்சனை ஏற்பட்டது என்றால் சரிதான்.

4. தாவா சொத்தை பன்னீர் செல்வமும் அவர் குடும்பத்தாரும் தான் அனுபவம் செய்துவருகிறார்கள் என்றால் சரியல்ல. எனது கணவர் சீதாராமனும், எனது குடும்பத்தாரும் எந்த காலத்திலும் மேற்படி சொத்தை அனுபவம் செய்யவில்லை என்றால் சரியல்ல. வழக்கிற்காக பட்டா மாற்றம் ஏற்பட்டது தெரியாது என பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. தாவா சொத்தை பாகம் பிரித்து கொள்ளலாம், பட்டா மாற்றம் செய்து கொள்ளலாம் என யாரிடம் கேட்டேன் என்றால் யாரிடமும் கேட்கவில்லை. பிரமாண வாக்குமூலத்தில் அது தொடர்பாக சொல்லியுள்ள சங்கதிகள் பொய் என்றால் சரியல்ல.

5. தாவா சொத்தில் உள்ள மரங்களை பன்னீர்செல்வம் மற்றும்

அவரது குடும்பத்தார் தான் வைத்து அனுபவம் செய்துவந்தார்கள் என்றால் சரியல்ல. தாவா சொத்தின் பட்டா மற்றும் வரைபடத்தை நான் பார்த்துள்ளேனா என்றால் இல்லை. எனது பிரமாண வாக்குமூலத்தில் நான் சொல்லியுள்ள சங்கதிகள் பொய் என்றால் சரியல்ல. எனக்கும், எனது மகளுக்கும் ஆறுமுகத்திற்கும் மற்றும் அவரது வாரிசுகளுக்கும் எனது கணவர் சீதாராமன் தாவா சொத்தை விற்ற விவரம் தெரியும் என்றால் சரியல்ல. எனது கணவர் சீத்தாராமனுக்கு வேறு சொத்து எதுவும் இருந்ததா என்றால் இல்லை. எனது கணவர் சீதாராமன் உயிருடன் இருந்த காலம்வரை அவர் தான் குடும்பத்தை பார்த்து வந்தார். எனது கணவர் சீதாராமன் குடும்ப நலனுக்காக தாவா சொத்தை விற்றுவிட்டார் என்றால் சரியல்ல.

6.தாவா சொத்துக்கள் பன்னீர்செல்வத்திடம் தான் அனுபவத்தில் உள்ளது என்றாலும், அதனால் இந்த வழக்கை அவர் மீது தாக்கல் செய்துள்ளேன் என்றாலும், மேற்படி கிரையப்பத்திரம் நடைமுறைக்கு வரவில்லை என்றாலும், பன்னீர்செல்வத்தின் பெயரில் கிராம கணக்குகள் ஏற்படவில்லை என்றாலும் சரியல்ல. தாவா சொத்தை பொறுத்து எனக்கு எந்தவித சுவாதீன அனுபவம் இல்லை என்றால் சரியல்ல. எனது வழக்குரையில் தென்வடலாக தான் பாகம் பிரிக்கப்பட்டதாக தான் கட்சி செய்கிறேன் என்றால் சரிதான்.

7. எனது பிரமாண வாக்குமூலத்தில் கிழமேலாக பிரித்து கொண்டதாக சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. எனது கணவர் குடும்ப நலனுக்காக கிரையம் செய்து கொடுத்த

ஆவணத்தில் என்னுடைய கையொப்பமும், எனது மகளின் கையொப்பமும் இல்லாததை பயன்படுத்தி கொண்டு பன்னீர்செல்வத்திற்கு எதிராக பொய்யாக கட்சி செய்து இந்த வழக்கை காலதாமதமாக தாக்கல் செய்துள்ளேன் என்றாலும், அதனால் இந்த வழக்கு தள்ளுபடி செய்யத்தக்கது என்றாலும் சரியல்ல.

**Signed,**

பழனியம்மாள்

சாட்சி சொல்ல சொல்ல திறந்த நீதிமன்றத்தில் என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு பின்பு சாட்சி சரி என ஒப்புக்கொண்டு என் முன்பு கையெழுத்திட்டார்

PRAGATHEESHWARAN SUBRAMANIAN

Digitally signed by PRAGATHEESHWARAN SUBRAMANIAN

மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்,
இலால்குடி.